1972 சனவரி 29]

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Co-operation whether there is any proposal of Government to open supermarkets in all taluk headquarters?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : The proposal is to open mini-supermarkets and not supermarkets in taluk headquarters.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, இந்த சூப்பர் மார்க்கெட், சிறப்பு அங்காடியில் சில குறிப்பிட்ட பொருள்கள் அதாவது அமுல், அமுல் ஸ்ப்ரே, சைகிள் டயர் போன்ற பொருள்களைக் கேட்டால் அங்கே உள்ளவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் மெம்பர்களுக்குத்தான் கொடுப்போம். மற்றவர்களுக்கு கிடையாது என்று சொல்கிறார்கள். இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இதைப்போக்க என்ன நடவடிக்கை எடுக்கப்போகுகிறீர்கள் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தஞ்சை சூப்பர் மாக்கெட் நடத்துகிறவர்கள் இந்த அவையில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். உறுப்பினர் அவர்களுக்கு அந்தப் பால் தகுந்த அளவில் கிடைக்கவில்லை என்றால், அவர்களிடத்தில் நேரில் சொல்லலாம்.

***150 வினு.—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

மதுரையிலுள்ள சூப்பர் மார்க்கெட்டை வேறு இடத்திற்கு மாற்றுகிற செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : உள்ளது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, மதுரையில் உள்ள சூப்பர் மார்க்கெட் இப்போது ஒதுக்குப்புறத்தில் இருக்கிறது. அந்த மார்க்கெட் மதுரை மாவட்ட கூட்டுறவு வனிக விற்பனைச் சங்கத்தின் மேற்பார்வையில் நடத்தப்படுகிறது. அந்தச் சங்கத்தின் அலுவலகம் கடைவீதிப்பகுதியில் இருக்கிறது. அங்கே நிறைய இடம் இருக்கிறது. அந்த இடத்தில் இந்த சூப்பர் மார்க்கெட்டை மாற்றுவது குறித்து அரசு பரிசிலிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த சூப்பர் மார்க்கெட் விவகாரம் புறையோடிப்போய்விட்டது. இதை மாற்றினால் மட்டும் போதாது. மொத்தம் ரூ. 4 இலட்சம் நஷ்டம் ஆகியிருக்கிறது. இதைச் சிரமைப்பதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறும்போது நஷ்டம் ஏற்பட்டதாகக் கூறினார்கள். அந்த நஷ்டத்தை ஈடுகட்ட என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அதற்காக தனியான உத்தரவுகள் என்னென்ன பிறப்பிக்கவேண்டுமோ அவை இப்போது ஆய்வில் இருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : இந்த சூப்பர் மார்க்கெட்டில் நஷ்டம் ஏற்படுவதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அங்கே இருக்கும் பணியாளர்களுக்கு குறைந்த சம்பளம் கொடுக்கப்பட்ட காரணத்தால் இந்த நஷ்டம் ஏற்பட்டதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த விடையானது மதுரை சூப்பர் மார்க்கெட்டைப் பற்றியது. அதில் ஏராளமான குறைகள் இருக்கின்றன.

Fruit Processing Unit in North Arcot district.

* 151 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the **Minister** for Co-operation be pleased to state—

(*a*) whether the Fruit Processing Unit of the North Arcot District Co-operative Marketing and Supply Society has received orders, for supply of tomato juice and peeled tomatoes, from France during 1970–71–72; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) வினவிற்கு இடமில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்த வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கின்ற ப்ரூட் பிராசசிங் யூனிட்டில் ஏற்கெனவே செய்யப்பட்ட பீல்டு பொடடோஸ், டொமடோ ஜூஸ் விற்பனை இல்லாமல் தேங்கி இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தக்காளிச் சாறு ஏற்றுமதி செய்வது பற்றி பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. ஏற்கெனவே செய்யப்பட்ட தக்காளிச் சாறுக்கு வெளிநாட்டில் விற்பனை இல்லை. ஆனால் மாம்பழச் சாறு 20 டன்னுக்கு ஆர்டர் வந்து, சோவியத் ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, வேலூரிலுள்ள அந்தப் பழப்பதனிடும் தொழிற் சாலை தன்னுடைய முழு அளவான வேலையைச் செய்ய முடியவில்லை என்பது உண்மையா ? அப்படியானால் முழு அளவுக்கு வேலை செய்ய வேண்டிய பழவகைகளை உற்பத்திச் செய்வதற்கு உடனடியாக ஒரு திட்டத்தை அரசு தயாரித்து. பழச்சாறு ஏற்றுமதி செய்ய அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்தப் பழச்சாறு ஆலை முழுஅளவுக்கு வேலை செய்யவில்லை என்பது உண்மைதான். ஆனால், மாம்பழச் சாறு ஏற்றுமதி செய்வதாக இருந்தாலும் அதற்கு போதிய அளவுக்கு மார்க்கெட் இல்லை. இப்போது பைனாப்பிள் அன்னாசிப் பழத்தை வெட்டி டின்னில் அடைத்து வெளிநாட்டிற்கு அனுப்பும் திட்டம் ஒன்றை செயல்முறையில் நடத்தலாமா என்று அரசு ஆராய்ந்து வருகிறது.